GCG1-3-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். அதாவது, இந்த நிகழ்ச்சி சுமார் 200 தேசங்களில் ஒளிபரப்பாகிறது, அதனால் இன்றைக்கு உலகமெங்கிலும் இருக்கிற ஜனங்கள் இதை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் அனைவரும், நினைவில்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் எழுநூறு கோடி மக்கள் வாழும் இந்த பூமியில் நாமும் இருக்கிறோம்.கிறிஸ்தவர்களை பொறுத்தவரை, இன்னும் நானூற்று ஐம்பது கோடி மக்கள் இன்னும் இயேசுவை பற்றி கேள்விபடாமல் இருப்பதை நினைக்க வேண்டும். அவர்களை சந்திக்கும்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார், அதை பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறோம். அதைதான் பிரதான கட்டளை என்கிறோம். நாம் சிறந்த வேதாகம ஆசிரியரை அழைத்திருக்கிறேன் அவர் நமக்கு இந்த காரியங்களை விளக்கி பிரதான கட்டளையை சுற்றி தேவன் தமது வார்த்தைகளில் கூறியிருக்கும் வாக்குத்தத்தத்தை பற்றி நமக்கு போதித்திடுவார். சரி, ராபி, பிரதான கட்டளையில் இயேசு கேட்கப்பட்ட ஐந்து விதமான கேள்விகளுக்கு பதில் அளித்திருக்கிறார் என்றீர்கள். அவை என்ன?

**ராபி கேலட்டி:** இதோ அந்த ஐந்து கேள்விகள்: “யாரிடத்திற்கு போக வேண்டும்? எங்கே போகவேண்டும்? எதை கொண்டு செல்ல வேண்டும்? எப்படி போக வேண்டும்?
இறுதியாக, “எதற்காக போக வேண்டும்?”

முதலாவதாக, யாரிடத்திற்கு போக வேண்டும்? இந்த பகுதியில், இயேசு சொல்கிறார், “புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்.” ஜாதிகள் என்ற வார்த்தையின் கிரேக்க பதம் “எத்னாய்”. இந்த வார்த்தையில் இருந்துதான் ஆங்கில வார்த்தையான எத்னிசிட்டி உருவானது. கிரேக்க ஆங்கில அகராதி இந்த வார்த்தை பற்றி சொல்கிறது: “ஒரே குலத்தை கலாச்சாரத்தை, பொதுவான பாரம்பரியத்தை கொண்ட ஜனக்கூட்டம் என்று சொல்கிறது.” இது ஒரு பிரச்சனை இருக்கு, ஜான். நமது எண்ணம் இதுதான் , “சகல ஜாதிகளிடத்திற்கும் பொங்கல் என்பது, புவியில் இருக்கும் இடங்கள். ஆனா இயேசு இதை ஜனங்களுக்கு ஒப்பிட்டு சொல்லுகிறார். உண்மையில், உங்களுக்கு ஒரு உதாரணத்தை சொல்கிறேன், இந்தோனேஷியாவில், இந்தோனேஷியா ஒரு தேசம்.

ஆனா இந்தொநேஷியாவுக்குள், சுமார் 300 விதமான மக்கள் இனங்கள் இருக்கிறார்கள் அவர்கள் கூடி ஒரு தேசமாக கருதப்படுகிறார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. இயேசு நம்மை ஒவ்வொரு மக்கள் இனத்திடமும் செல்லும்படி சொல்லுகிறார்.

**ராபி கேலட்டி:** ஆமா, நிச்சயமா. சரி, எதனால ஜனங்கள் பிரதான கட்டளையை பின்பற்றுவதில்லை? எல்லா ஜாதியினரிடமும் போகாமல் இருப்பது ஏன்? இந்த பிரதான கட்டளை மிகப்பெரிய கற்பனையோடு இசைந்திருக்கிறதென்று நினைக்கிறேன். வேதாகமத்தில்  இயேசு என்ன சொல்லியிருக்கிறார் என்று நினைவிருக்கிறதா. அவர் சொல்கிறார், உங்கள் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் முழு பெலத்தோடும் கர்த்தரில் அன்புகூருங்கள், உங்களிடத்தில் அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருங்கள்." இதில் இருக்கும் தொடர்பு இதுதான்: தேவனுக்கு உரிய அன்பு உங்களிடத்தில் இருந்தால் நிச்சயம் பிறனுக்கான அன்பு உங்களிடத்தில் இருக்கும் என்று இயேசு கூறுகிறார்.

இதை யோசிக்க வேண்டிய நிலை இருக்கிறது. நம்முடைய இந்த நிலையின் உறவில் சறுக்கல் இருந்தால், இந்த நிலையின் உறவில் நிச்சயம் பிரச்சனை இருக்கும். தேவனுக்கான நமது அன்பு வளரும்போது, இயற்கையாகவே மற்றவர்களுக்கான நமது அன்பு வளர்ந்திட ஆரம்பிக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, நீங்க சொல்றது சரிதான்.

**ராபி கேலட்டி:** யோவான் இதை 1 யோவான் நான்கில் இப்படியாக சொல்கிறார்.

வசனம் 7 சொல்கிறதை கவனியுங்கள்: " பிரியமானவர்களே, ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்ககடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது, அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்.." எப்படி சேர்ந்திருக்கிறது என்று பாருங்கள். "அன்பில்லாதவன் தேவனை அறியாதவனாயிருக்கிறான், ஏனெனில் தேவன்

அன்பாகவே இருக்கிறார்." வசனம் 11:. " பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூற கடனாளிகளாயிருக்கிறோம். தேவனை ஒருவரும் ஒருகாலும் தரிசித்ததில்லை, நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார், அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்."

இதை போன சில நிகழ்சிகளில் பார்த்திருக்கிறோம். பிதாவுன் அன்பு அவருடைய குமாரனிடதிலிருந்து ஆவியானவர் மூலமாக சீஷர்களுக்குள் வந்தது. நாம் மற்றவர்களை நேசிக்க துவங்கிடுவோம், ஏனென்றால் பிதாவின் அன்பு இருந்தால், ஜாதிகளுக்கு கடந்துசெல்ல வேண்டும் என்று இருதயம் நமக்கு உண்டாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இதை ஆதி திருச்சபைகளில் பார்க்கிறோம். இதை அவர்கள் அப்பியாசப்படுத்தினார்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. சரி, சுவிசேஷம், அதை ஒரு இரவு கூடமாக நாம் மாற்றிவிட்டோம். தேவனை துதிப்பதையும் ஒரு மாலை கூட்டமாக சபைகள் மாற்றிவிட்டன. சுவிசேஷ பிரசங்கத்தை நற்ச்செய்தி கூட்டமாக மாற்றிவிட்டோம், அல்லது பிரதிகளை கொடுத்து ஒருவருடன் பகிர்ந்துகொள்வதாக இருக்கிறது. அதற்காக தேவனை துதிக்கிறோம். என்னுடைய வாழ்விலும் இந்த விதங்களை பயன்படுத்தியிருக்கிறேன். ஆனா இதற்கும் மேலாக ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்க வேண்டும் – ஒரு இரவு கூட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று. எல்லாநேரமும் ஜனங்களை நேசிக்க வேண்டும், எங்கிருந்தாலும் சரி. அது... நம்மை சூழ்ந்திருக்கிற மக்கள் மற்றும் சூழ்நிலையை பற்றிய உணர்வோடு இருப்பது அவசியம், அப்படியிருந்தால் அவர்களை நேசிக்க துவங்குவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ராபி, நடைமுறையை பார்க்கலாம். ஒருவருடைய வாழ்க்கையில் இது எப்படி சாத்தியமாகும்?

**ராபி கேலட்டி:** சரி. ஒரே நபரை பார்க்கும்படி ஒரே இடத்திற்கு ஒரே சமயத்தில் போவது போல இருக்கும். ஒருவேளை ஓரே காபி ஷாப் போகலாம். அங்க போவீங்க – காபியோட – அந்த நபருடன் இருக்கும் உறவை வளர்த்திட முயலுவீர்கள். அவர்களை அறிந்துகொள்ள துவங்கிடுவீர்கள். ஜனங்களோடு ஒரு உறவை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கும். நம்முடைய சபை மக்களை ஒரு கேள்வி கேட்க்கிறேன், எத்தனை நபர்களோடு உங்கள் உறவை நீங்கள் வளர்த்துகொண்டு வருகிறீர்கள்? சிறந்த கேள்வி, எத்தனை அவ்விசுவாசிகளை உங்களுக்கு தெரியும்? அதாவது, கிறிஸ்தவ வாழ்வில், உலகத்தில் பல காரியங்களோடு பிணைக்கப்பட்டிருக்கலாம் – கிறிஸ்தவ பள்ளிகளுக்கு செல்வோம், கிறிஸ்தவ கல்லூரிகளுக்கு போவோம், கிறிஸ்தவ திருமணம் தான் நடக்கும், கிறிஸ்தவ ஞானஸ்நானம் இருக்கும், கிறிஸ்தவ ஆராதனைகளுக்கு செல்வோம், கிறிஸ்தவ ஞாயிறு பள்ளிகள் – இப்படி இந்த உலகில் நமக்கென்று ஒரு சூழலை உருவாக்கியிருப்பதால் அவ்விசுவாசியான  நண்பர்கள் குறைவாகவே இருப்பார்கள். இயேசு நம்மிடம் கூறுகிறார், இழந்துபோனவர்களை சந்திக்க வேண்டும்.

சரி, அடுத்தது இதை எப்படி செய்வது? அதையும், இயேசுவே சொல்கிறார். ஜனங்கள் எங்க இருக்காங்களோ அங்க போக வேண்டும். அப்போஸ்தலர் 1:8 நியாபகமிருக்குதா, இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு தம்முடைய சீஷர்களுக்கு இந்த கட்டளையை கொடுக்கிறார். அவர் சொல்கிறார், “ பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமியும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் உலகத்தின் முடிவுபரியந்தம் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்.” தம்முடைய சீஷர்கள் எருசலேமிலிருந்து துவங்கும்படி விரும்பினார். இதை, பற்றி , நிறைய பேசியிருக்கோம், ஜான், ஜாதிகளுக்கு மத்தியில் செல்ல வேண்டும், ஆனா நம்முடைய அயலகத்தாரிடம் முதலாவது செல்ல வேண்டும் என்பதை மறந்துவிட்டோம். அதாவது, நாம் தேசங்களுக்கு கடந்து செல்வதற்கு முன்பு, அடுத்ஹ்ட தெருவுக்கு போக வேண்டியது முக்கியம், அல்லது அடுத்த ஊருக்கு போய் ஒருவருக்கு இயேசுவை பற்றி சொல்வேண்டியது அவசியம்.

ஆனா இயேசு சொல்கிறார், நீங்க எருசலேமுக்கு போனவுடனே – உங்க அயலகத்தாரிடம் சென்றது – யூதேயாவுக்கு போங்க, அது நம்முடைய மாநிலமாக இருக்கிறது, நாம் வாழும் மாநிலம். அப்பறம் சமாரியா, கடினமான இடங்கள், அது நாம் வாழும் நாடாக இருக்கலாம். ஆனா அப்பறம் அவர் சொல்கிறார், உலகத்தை கடைசி பரியந்தம் செல்லுங்கள். இதுல எனக்கு சுவாரஸ்யமாக தோன்றுகிறது என்னவென்றால், இங்க ஒன்றையொன்று இணைக்கும் சொல் அல்லது என்று இல்லை – நீங்க எனக்கு சாட்சிகளாக எருசலேமிலும் யூதேயாவிலும் சமாரியாவிலும், அல்லது உலகத்தின் கடைசி வரையிலும் என்று இல்லை. சேர்ந்தே இருக்கிறது. நான் நினைக்கிறேன், ஒரு விசுவாசியாக, உலகத்தின் இந்த நான்கு பகுதிகளிலும் இந்த பிரதான கட்டளையில் நாமும் பங்கு வைக்க வேண்டியது அவசியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை எப்படி செய்வது?

**ராபி கேலட்டி:** சரி, இதை செயல்படுத்துவதற்கான சில வழிகளை இயேசு காட்டியிருக்கிறார். என்னுடைய சொந்த சாட்சியை உங்களுக்கு சொல்லுகிறேன். தேவன் என்னை ஊரூராக கொண்டு சென்று சுவிசேஷ ஊழியத்தை செய்யும்படி பயன்படுத்திடுவார் என்று நான் நினைத்துகொண்டிருந்தேன். உங்கள மாதிரியே நானும் அதிகமா பிரயாணம் செய்திடுவேன். பெரிய சுவிசேஷ கூட்டங்களை நடத்திடுவேன். ஒருசில வருடங்களுக்கு முன்பு, பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு செல்லும்படி கேட்டுகொண்டார்கள். ஒரு வாலிப கூட்டத்தில் வந்து என்னை பேசும்படியாக அழைத்தார்கள். அதையும் செய்தோம். உயர்நிலை பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நடுவில் ஒரு இடம் கிடைத்தது, அந்த சமயத்தில் மாணவர்கள் வகுப்புகளை முடித்து வெளியே வந்தனர். ஆராதனை குழுவினர் இசை வாசித்தனர் நான் எழும்பி நின்று பிரசங்கிக்க வேண்டும். அது, ஜான், வியப்பாயிருந்தது. தேவனுடைய ஆவி அந்த ஆராதனையில் ஊற்றப்பட்டது. அங்க பார்க்கும்போது, இரண்டு நாட்களில், ஆயிரம் பேர் தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்தார்கள். நா பிரசங்கியார இருந்ததால அது நடக்கல,

அது தேவனுடைய கிருபைதான். நா மேடையிலிருந்து இறங்கினவுடன், தேவன் என்னிடத்தில் இடைபட்டார். தேவன் என்னிடம் கூறினார், “எனக்காக தீர்மானம் எடுத்த பிள்ளைகளை நீ என்ன செய்யப்போகிறாய் என்று கேட்டார். அவர் சொன்னார், “அவர்கள் விசுவாசத்தில் வளர அவர்களுக்கு உதவிடுவாயா? இவர்களை கண்காணிக்க போவது யார் என்றார்?” விளக்குகள் அணைக்கப்பட்டவுடன் இசையின் சத்தம் நின்று போன பிறகு, சீஷத்துவத்துவம் மற்றும் சுவிசேஷம் பகிர்ந்தலின் முக்கியத்துவத்தை தேவன் என் இருதயத்தில் உணர்த்தினார்.

ஜான், நான் சொல்வதை நீங்கள் கேட்க்க விரும்புகிறேன். சுவிசேஷத்தை அறிவிப்பது அவசியம்தான். கைபிரதிகள் அவசியம். அவ்வப்போது சுவிசேஷ கூட்டங்களை நடத்த வேண்டியது அவசியம்தான். ஆனால் தனிப்பட்ட நிலையின் வளர்ச்சியும் அவசியம், ஒவ்வொரு விசுவாசியும் தனிப்பட்ட விதத்தில் சிலரை ஆதாயம் செய்யவேண்டும். மற்றவர்களோடு சரியான உறவை வளர்த்துகொள்ளும் காரியத்தில் ஒவ்வொரு விசுவாசியும் கூர்ந்து செயல்பட்டால் சபை எப்படி இருக்கும் என்று சிந்தித்துபாருங்கள்? இயேசு நமக்கு மாதிரியை காட்டியிருக்கிறார். அவர் பன்னிரண்டு நபரை தெரிந்துகொண்டு சரித்திரத்தையே மாற்றிவிட்டார். ஜான் வெஸ்லி, சிறந்த எழுப்புதல் வீரர், அவர் சொல்லியிருக்கிறார். அதாவது, “என்னிடம் பாவத்தைவிட அதிகம் எதையும் வெறுக்காமல் தேவனை விட அதிகம் யாரையும் நேசிக்காமல் இருக்கும் ஐம்பது வாலிபர்களை கொடுங்கள், இந்த உலகத்தையே தலைகீழாக மாற்றிக்காட்டுகிறேன்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப, ஜனங்களுடைய எண்ணம், “இது, அதாவது, ராபி, ஒருவரோடு உறவை வளர்த்திடவேண்டும் என்று எனக்கு தெரியும். ஒரு கப் காபியோடு அவங்களோட நல்ல நட்புறவை நான் வளர்த்துக்கொள்ள முடியும்.” ஆனா விஷயம் என்னன்னா, அவங்ககூட இருக்கும்போது நாம என்ன பேசனும்? அந்த செய்தி என்ன?

**ராபி கேலட்டி:** சரி. இது சிறந்த கேள்வி, ஏன்னா காபி குடிக்கனுன்னு காபி குடிக்க போறது தீர்வாகாது. நாம சுவிசேஷத்தின் செய்தியோடு அவங்ககிட்ட போகணும். இயேசு அதை சரியாக சொல்லியிருக்கிறார். மாற்கு 1:15 நினைவிருக்கிறதா, அதில், " யோவான் சிறையில் அடைக்கப்பட்ட பிறகு, இயேசு தேவனுடைய சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியாக கலிலேயாவிற்கு வந்து, காலம் சமீபமாக இருக்கிறது என்றார். பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்றார்." அவரால் எப்படி இதை சொல்ல முடிந்தது? ராஜ்ஜியம் அவரை சுற்றிதான் இருந்திருக்கும் ஏன்னா அவர் அங்கதான இருந்தார். அதற்கு பிறகு இந்த வார்த்தைகளை சொல்லுகிறார், இது வெளிப்படையாக இருக்கிறது, "மனந்திரும்பி தேவனுடைய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்." இதுதான் அந்த செய்து. இந்த அதிகாரப்பூர்வமான செய்தி நம்மிடம் இருக்கிறது. இது இரண்டு நிலையான செய்தி. நாணயத்தின் ஒரு பக்கத்தில் மனந்திரும்புதல் இருக்கிறது, இது எதிர்மறையான நிலையாக இருக்கலாம். சாதகமான மறுபக்கமும் இருக்கிறது, அதுதான் கர்த்தாகிய இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம். முதல்ல மனந்திரும்புதல்.

மனந்திரும்புதல் என்பது திரும்புகிற ஒரு விஷயமாக இருக்க்ரியது. இதை ஏற்க்கனவே கேட்டிருக்கிறோம். ஒரு திசைய பார்த்து சென்றுகொண்டிருந்தாள் நீங்க போகிற பாதை தவறானது என்று உங்களுக்கு தெரியும்போது உடனடியாக அந்த பாதையிலிருந்து திரும்பிடுவீர்கள். இன்றைய, தொழிநுட்பத்தை, நாம் அதிகமாக நேசிக்கிறோம் GPS சிஸ்டம். அதாவது, கடந்த காலங்களில் என்னுடைய மனைவியை நான் சார்ந்துகொள்வேன், அல்லது என்னுடைய குடும்ப நபர்களை சார்ந்திடருப்பேன், "ஹே, இப்படி திரும்புன்னு சொல்வாங்க." ஆனா இன்றைக்கு, நாம வாழ்கிற இந்த காலத்தில் GPs நமக்கு சொல்லுது, "அடுத்தது, ஒரு U turn வருகிறது." இது, தான் மனந்திரும்புதல். மனந்திரும்புதல் என்பது ஒரு பாதையில் போயகொண்டிருக்கையில், அதிலிருந்து ஒரு U turn திரும்புவது. ஆனா இது அதற்கும் மேலானது. சாதரணமாக திரும்புவது மட்டுமல்ல, ஒரு விஷயத்தை குறித்து சிந்திக்கும் தன்மையை மாற்றிகொள்வதாகும், உதாரணமாக பாவம். பாவத்தை தேவன் பார்க்கிற விதமாக பார்க்க வேண்டும். பாவத்தை தேவன்

வெறுக்கிற விதமாக வெறுக்க வேண்டும். அதுதான் திரும்புதல் – இதையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கும் நமது விசுவாசத்தில் நம்பிக்கையில் செயல்படுத்த வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ராபி, இயேசு இஸ்ரேலுக்கு வந்தபோது, அவங்க மனந்திரும்ப வேண்டியிருந்தது. ஒருசில விஷயங்களில் மனந்திரும்பினார்கள். ஒன்று, அவர்கள் பாவி என்பதை புரிந்துகொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்று நினைத்துகொண்டிருந்தார்கள், அதனால் எல்லாருக்கும் இது அவசியமாக இருந்தது. நீங்க தேவன் முன்பாக நிற்கிறீர்கள் என்பதை உணரவேண்டும் என்று இயேசு கூறினார். நியாயப்பிரமாணத்தை தகர்த்திட்டீர்கள் என்றார், சரியா? உங்களுக்கு இரட்சகர் தேவை. அடுத்தது யார் அந்த இரட்சகர் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அவங்களுக்கு இதை நம்புவது கடினமாக இருந்தது தேவனுடைய மேசியா, இயேசுதான், அவர் தேவனுடைய குமாரன்தான், சரி. இன்றைக்கும் ஜனங்களுக்கு இதே பிரச்சனைதான் இருக்கிறது. அநேக ஜனங்கள் தங்கள் அயலகத்தாரைவிட இவர்கள் மேலானவர்கள் என்று நினைக்கிறார்கள், “ஹே, அவ அப்படி செய்தால், நானும் அப்படி செய்வேன்.” ஆனா அவங்க அப்படி செய்யலைனா, நானும் அப்படி செய்ய மாட்டேன். தேவன் நம்மை எப்படி பார்க்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவருடைய பிரமாணத்தை தகர்த்துவிட்டோம். உங்களுடைய மனதை நீங்கள் மாற்றுகொள்ளவேண்டும் நீங்க இப்படிதான் இருக்கீங்க. நீங்க ஒரு பாவி. தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் உறவு முறிந்து கிடக்கிறது.

அடுத்து, இரட்சகர் யார் என்பதை பற்றிய உங்கள் சிந்தனையை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். அது நீங்க கிடையாது. தேவனை பிரியபடுத்தும்படி நீங்க எங்க எப்படி செயல் படறீங்க என்பது பொருட்டல்ல. நீங்க புரிந்துகொள்ள வேண்டியது அவசியம், “நான் ஒரு பாவி இயேசுதான் ஒரே இரட்சகர். என்னை மீட்க கூடிய ஒரே நபர் அவர்தான்.” அவர்

வந்து சிலுவையில் மரித்திருக்கிறார். என்னுடைய பாவத்தின் பலியை செலுத்தினார். என்னை மன்னிக்க அவர் ஆயத்தமாக இருக்கிறார்.

மனந்திரும்புதல், மனதை மாற்றிகொள்ளுதல், சுபாவத்தை மாற்றிகொள்ளுதல், நான் யார் என்பதை புரிந்துகொண்டவர்களாக கரங்களை அவருக்கு நேராக நீட்டுதல். மனந்திரும்புதல் என்பது அவருக்கு நேராக கரங்களை நீட்டி பிடித்தல். விசுவாசம் என்பது இதற்கு அடுத்து இருக்கும் நிலை, இதில் உங்களை இரட்சிக்க கூடிய அந்த நபரில் உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்திடுவீர்கள். விசுவாசத்தை பற்றி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்கள்.

**ராபி கேலட்டி:** சரி. விசுவாசம் என்பது இயேசு கிறிஸ்து தன்னை பற்றி

சொல்லியிருப்பதை அப்படியே நம்புவதாகும். அவர் தேவனுடைய குமாரன், உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே மனிதனின் பாவத்தை சுமந்து தீர்க்கும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர். வாழ்ந்தது மட்டுமல்ல, மரித்ததும், உயிரோடு எழுந்ததும், பரலோகத்திற்கு ஏறிச்சென்றதும் உண்மை. அவர் மீது நமது விசுவாசத்தை வைக்கிறோம். இந்த பூமியில் வாழ்ந்த சரித்திர நாயகர் இயேசு கிறிஸ்து என்று நம்புகிறோம், அவர் தேவன். அதனால்தான் அவரில் விசுவாசமாக இருக்கிறோம். ஒரு விஷயத்தை நம்புவதற்கு சமமாக இருக்கிறது, சிந்திப்பது மட்டுமல்ல, செயல்படுவதும் உண்டு. இந்த சேர் என்னை இறுக பிடித்திருக்கிறது என்று நம்புகிறேன், இன்றைக்கு முழுவதும் என்னால இத சொல்லமுடியும். ஆனா இதற்கு முதல்ல இந்த சேர்ல உட்கார்ந்து என் விசுவாசத்தை செயல்படுத்தனும் – அதைப்போல கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை நான் செயல்படுத்தவேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, என்ன சொல்றீங்கன்னா, “இயேசுவே, நீங்க என்ன

இரட்சிக்கலன்னா என்னால இதை செய்ய முடியாது. எல்லாம் உங்ககிட்ட தான் இருக்கு.” அதனால மனம்திரும்புகிறோம் மனந்திரும்பிய விசுவாசம் இருக்கிறது. சுயத்திலிருந்து

திரும்பிவிட்டோம், சுயத்திலிருந்த நம்பிக்கையை விட்டு, கிறிஸ்துவின் மீது நம்பிக்கையை வைத்தோம். அதனால அவர் உள்ளே வந்து நம்மை அவரே மாற்றுகிறார்.

இந்த செய்தியைத்தான் நம்முடைய அயலகத்தாருக்கு நாம் சொல்ல  வேண்டும். நீங்க மதுபானத்திற்கு அடிமையாய் போதை வஸ்துக்களுக்கு அடிமையாக இருந்தபோது, உங்களைக உங்களுக்கு விடுதலை தரமுடியாதுன்னு உங்களுக்கு தெரியும். அந்த கடைசி கட்டத்துல நின்னுட்டு இருந்தீங்க, உதவிக்காக கதறினீர்கள் அவர் உங்களை மன்னித்து நீங்கள் இருந்த நிலையிலிருந்து உங்களை தூக்கி விட்டார்.

**ராபி கேலட்டி:** சரி. இந்த உலகத்தில் பார்க்கும்போது, ஜான், எல்லாம், “இது எனக்கு உரியதுன்னா, என்னுடைய விருப்பம் போலதா நடக்கும்.” ஆனா நா ஒரு நிலைக்கு வந்துட்டேன் – 2 முறை மறுவாழ்வு மையத்திற்கு போய் வந்த பிறகு மதுபானத்திற்கு அடிமையாக இருந்தேன் – என்னை என்னால் இரட்சித்துகொள்ள முடியாது என்ற நிலைக்கு என்னுடைய கடந்த காலத்தில் நான் நின்றிருக்கிறேன். அந்த நிலையில் தேவநிடத்திலோ அல்லது மற்றவர்களிடத்திலோ எனக்கு உதவும்படி நான் கேட்க்க வேண்டிய நிலை இருந்தது. அப்பதா கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் வந்தேன். அதன் மூலமாக ஒரு பெரிய நிலைமாற்றம் எனக்கு உண்டானது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்போது இதை கேட்டுகொண்டிருக்கிற நேயர்களுக்கு சொல்லுகிறேன், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்ள போகிறோம், சரியா. ஒரு விஷயம், நீங்கள் மனந்திரும்பியிருக்கிறீர்களா? உங்களை ஒரு பாவியாக நீங்கள் பார்த்தது உண்டா? உங்களை நீங்களே இரட்சித்து கொள்ள முடியாது என்று உணர்ந்திருக்கிறீர்களா? நீங்க தேவனுக்கு முன்பாக நின்று சொல்ல முடியுமா, “சரி, இதை செய்துட்டேன், அதை நான் தான் செய்தேன்.” அது போதுமானது கிடையாது. பரலோகத்திற்கு போகும்படியான நற்குணங்கள் உங்களுக்குள் இருக்கிறதா? நீங்க பரிபூரமுடியவர்களாக இருக்க வேண்டியது அவசியம். இயேசு கூறுகிறார், “நீங்கள் பூரணராயிருங்கள், உங்கள் பரம பிதா பூரணராக இருக்கிறார்.” நீங்க பூரன்ராக

இருக்கீங்களா? நம்மில் யாருமே அப்படியில்ல. இதை நீங்கள் அறிந்துகொண்டு உங்களுக்கு ஒரு இரட்சகர் அவசியம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும், அந்த இரட்சகர் யார், அவரை உங்களை இரட்சிக்கும்படி கேளுங்கள். உங்களை நீங்கள் அவரிடத்தில் ஒப்படையுங்கள் அவர் உங்கள் வாழ்வில் வந்திடுவார். இதுவரை அப்படி செய்திருக்கிறீர்களா?

இதுவரை அப்படி செய்யாதிருந்தால், இப்போது செய்ய முன்வந்திடலாமே? உங்கள் வாழ்வில் வரும்படியாக அவரை அழைத்திடுங்கள். சொல்லுங்க, “ நான் என் சுயத்திலிருந்து திரும்பி என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன். நான் ஒரு பாவி என்பதை ஒப்புக்கொண்டு உமக்கு முன்பாக ஏற்றுகொள்கிறேன். என்னை இரட்சித்து மாற்ற நீர் தேவை என்பதை உணர்கிறேன். இந்த நிமிடத்திலிருந்து, இயேசுவை நான் நம்புகிறேன் – அவர் என பாவத்தை சுமந்தவர், என்னை என் எல்லா பாவங்களில் இருந்தும் மீட்டு விடுதலை யாக்கிட நீர் வேண்டும்.” இப்போது இதை சொல்ல முன்வருவீர்களானால், வேதம் கூறுகிறது “அவருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.”

இதுதான் சுவிசேஷம், இந்த அருமையான செய்தியைத்தான் கிறிஸ்து நாம் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும்படியாக விரும்புகிறார் என்றால், இப்போது எழும்பும் கேள்வியை பற்றி நாம் இடைவேளைக்கு பிறகு பார்க்க இருக்கிறோம், இதை வல்லமையாக மற்றவர்களோடு எப்படி பகிர்ந்துகொள்வது? நாம் திரும்பி வந்ததும் அதை பற்றி நீங்கள் கேட்க்க இருக்கிறீர்கள். இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் ராபி கேலட்டியுடன் பேசிகொண்டிருக்கிறோம். நாம் பிரதான கட்டளையை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம். சுவிசேஷத்தின் செய்தி என்ன என்பதை பார்த்தோம், இப்போதும் அந்த செய்தியை எப்படி வல்லமையாய் மற்றவர்களோடு

பகிர்ந்துகொள்ளலாம் என்பதை பார்க்க இருக்கிறோம். ஒருவேளை, இப்போது, நாம துவங்கியதிலிருந்து இப்போது பார்க்க இருப்பதை சுருக்கமாக ஒருமுறை சொல்லுகிறீர்களா.

**ராபி கேலட்டி:** சரி. நாம் யாரிடத்திற்கு போக வேண்டும் என்பதை ஏற்க்கனவே பார்த்துவிட்டோம், சகல மக்களையும் சென்றடைய வேண்டும். எங்கே போக வேண்டும் என்பதை பற்றியும் பார்த்தோம், நான் சொன்னதுபோல நம்முடைய அயலகத்தாரிடத்திற்கும் தேசமெங்கிலும் செல்ல வேண்டும். மூன்றாவதாக, இந்த கேள்வியை வைத்தோம், “எதை கொண்டு செல்ல வேண்டும்?” சுவிசேஷத்தை பற்றி பேசினோம், கிறிஸ்துவின் செய்தியை எப்படி சொல்ல வேண்டும் என்று பார்த்தோம், மனந்திரும்புதல் மற்றும் விசுவாசம். இப்ப கேள்வி இதுதான், இதை எப்படி செய்வது? இந்த செய்தியை எப்படி பகிர்ந்துகொள்வது? இதை இரண்டு பிரிவுகளாக பிரித்து சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, இதை பகிர்ந்து சொல்லவேண்டும், பிரகடனம் செய்யவேண்டும். சரி, தொடர்ந்து பார்க்கலாம், வேதாகமத்தில் புறப்பட்டு போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று சொல்லப்பட்ட இடங்களில், பார்க்கும்போது ஜனங்கள், “சரி, பாஸ்டர், நான் பிரசங்கியார் கிடையாது, என்னால முடியாது – எனக்கு பொருந்தாது என்பார்கள்.” ஆனால் நாம் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அதற்கு ஒரு பிரசங்கியாக இருக்க அவசியமில்லை அல்லது கிறிஸ்துவின் அன்பை போதிக்கவும் அவர்கள் தங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசமாக இருக்க கற்றுத்தர வேதாகம கல்வி அவசியமில்லை.

ஆனா சுவாரஸ்யமான ஒரு விஷயத்தை உங்களுக்கு சொல்லுகிறேன், என்னுடைய சொந்த வாழ்க்கையில் நான் கற்றுகொண்டது. ஒரு சாட்சி முகவும் வல்லமையுள்ளது. அதாவது, மதுபானம் போதை பொருளுக்கு அடிமையாக இருந்த நான் தேவனிடத்தில் வந்தபோது, ஆரம்ப நாட்களில் நான் பகிர்ந்துகொண்ட ஒரு காரியம் என்னனா, ஜான், என்னுடைய சாட்சி. தேவன் என்னுடைய வாழ்வை எப்படி மாற்றினார். மாற்றப்பட்ட

வாழ்க்கையை முன்வைக்கும்போது விவாதங்கள் உண்டாகாது, உங்க வாழ்க்கையில் தேவன் நிகழ்த்திய செயலை ஒருவர் கேள்விபடுகிறார்கள், இதை தான் செய்யும்படி ஜனங்களை உற்சாகப்படுத்துகிறேன். இதைதான் புதிய ஏற்ப்பாட்டில் பார்க்கிறோம். சாவான் நான்கில், இயேசு ஒரு கிணற்றின் அருகில் சென்று அந்த ஸ்திரீயை சந்திக்கிறார். அவளுடைய சாட்சி, அவள் திரும்ப பட்டணத்திற்குள் சென்று, அவளை பார்த்த அனைவருக்கும் அது பெரிய எதிர்ப்பார்ப்பை உண்டாக்கியது.

இன்னொரு விதம் ஜனங்களை அலுவல் நிறைந்தவர்களாக்குவது. இதை ஏற்கனவே சொல்லியிருக்கிறோம், ஆனால் ஒவ்வொருநாளும் குறிப்பிட்ட அதே நேரத்தில் அதே இடத்தில் அதே நபரை சந்திப்பது. இந்த சவுகரியம் எங்களுடைய இடத்தில் இருக்கிறது அதை BX என்கிறோம், இது ஒரு உடற்பயிற்சி மையமாகும், எல்லா வசதிகளும் அங்கிருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஜிம்னாசியம் உடற்பயிற்சி மையங்கள் – எல்லா மெஷின்களும் அங்கு இருக்கும். அருமையான இடம்.

**ராபி கேலட்டி:** சரி, இந்த இடத்திற்கு சுமார் 3000 மக்கள் வந்துபோகிறார்கள். 2800 பேர் எங்க சபைக்கு வருவதில்லை. இந்த அருமையான அருட்பணி களத்தை சிந்தித்துபாருங்கள். சரி, நா காலை  நேரங்களில் அங்கு சென்று பயிற்சி செய்கிறேன். காலையில் செய்வதையே எதிர்பாக்கிறேன், வாரத்தில் மூன்று நாட்கள் செல்கிறேன். நான் அங்க இருக்கும்போது, என்னை சுற்றி இருப்பவர்களை பற்றி அறிந்துகொள்கிறேன். அதனால எப்போதும் புதிய மனிதர்களை பார்க்கும் எண்ணத்தோடு காணப்படுகிறேன், இவங்ககிட்ட எப்படி பேசலாம்? பொதுவா எனக்கு இருக்கும் கேள்வி,அவங்ககிட்ட, கேட்பேன்: “ஹாய் பிரதர், நீங்க மரித்த பின்பு நேரா நரகத்திற்கு போவீங்கன்னு உங்களுக்கு தெரியுமா?” அதாவது நேரடியா இந்த கேள்வியோட அவங்ககிட்ட பேச்சை ஆரம்பிக்க மாட்டேன். எப்படி ஆரம்பிப்பேன் என்று கேட்டால்: “ஹே, உங்க பேர் என்ன? நீங்க என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லுங்க. சொல்லுங்க, நீங்க எங்க

குடியிருக்கீங்க?” அதிலிருந்து அவர்களோடு சுமூகமான உறவை ஏற்படுத்திட துவங்கிடுவேன். உங்களுக்கு தெரியுமா கடந்த இரண்டு ஆண்டுகளில், நிறைய பேர் எங்க சபைக்கு வந்தாங்க சிலர் எங்க சிறுகுழு சீஷத்துவ வகுப்பிற்கு வந்தாங்க, அவங்ககிட்ட நா ஒருவரையோ அல்லது கைபிரதியோ சுவிசேஷத்தையோ சொன்னதால வரல, அவங்க வந்ததற்கு காரணம் இவங்க நம்மமேல இவ்வளவு அன்பாக இருக்கிறார்களே என்று எண்ணி வந்தனர். அந்த கைபிரதிக்கும் மேலான ஒரு அன்பு அங்கிருக்க வேண்டும். அவர் என்னை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இதுவரைக்கும் இல்லாத ஒரு விதத்தில் ஜனங்களோடு நாம் இதை பகிர்ந்திட வேண்டும், பலர் இதை கேட்க ஆவலாக இருக்கிறார்கள், இதுவரைக்கும் பல நாட்கள் சபையில் உட்கார்ந்திருந்தும் யாரும் அவர்களுக்கு இதை சொல்லாம இருந்திருக்கலாம்.

**ராபி கேலட்டி:** ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உங்க சாட்சியை பகிர்ந்துகொள்ள சொல்லா ஆரம்பியுங்கள், ஜனங்கள் அதற்கு மாறுத்தரமாக செயல்படுவதை பார்க்க வியப்பாக இருக்கும். அதை முயற்சிசெய்திடுங்கள்.

**ராபி கேலட்டி:** ஆமா. அநேக மக்கள் கேள்விப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது நகைசுவை நடிகர் – வித்தை காரர் – நடிப்பு குழுவான பெண் அண்ட் டெல்லர், இவங்க வித்தை கான்பிக்கிரவர்கள். பென் ஜில்லெட் அவர்கள் பென் அண்ட் டெல்லரில் ஒரு அங்கமாக இருக்கிறார்கள், அதோடு அவர்கள் தீவிர நாத்திகரும் கூட. இதை சொல்வதில் அவர் வெட்கப்படுவதில்லை, இதை முன்பே சொல்லியிருக்கிறார் இப்போது ஆவணங்களிலும் இதையே சொல்லி இருக்கிறார். ஒரு முறை அவருடைய வித்தை நிகழ்ச்சிக்கு பிறகு, கிதியோன் இயக்கத்தை சேர்ந்து ஒருவர் இவரிடம் வந்திருக்கிறார். அவருடைய கரத்தில் சிறிய புதிய ஏற்பாடு மற்றும் சங்கீதம் இருந்த கிதியோன் வேதாகமம் இருந்தது. அந்த

நிகழ்சிக்கு பிறகு இதை அவருடைய கரத்தில் கொடுத்து சொல்லியிருக்கிறார், “இது உங்களுக்கு பிடிக்காது என்று எனக்கு தெரியு,” இருந்தாலும், “நான் ஒரு விசுவாசி, ஒரு பிரசங்கியார் கிடையாது, என்னுடைய சபையில் ஒரு வியாபாரியாக இருக்கிறேன் என்றார்.” அந்த வேதாகமத்தின் பின்பகுதியில், இந்த நபரோடு எப்படி தொடர்பு கொள்வது என்பதற்கான சில நம்பர்களை எழுதியிருந்தார். அவர் சொன்னாராம், “உங்களுக்கு உதவி தேவை பட்டால், என்னை தொடர்புகொள்ளுங்கள்,” இப்ப, பென் ஜில்லெட் இண்டர்நெட்ல இந்த வீடியோவை பதிவு செய்தார். இந்த நபரை குறித்து அவர் என்ன நினைத்தார் என்பதை அவர் வாயினால் சொன்னவற்றை உங்களுக்கு வாசித்து காட்ட விரும்புகிறேன்.

அவர் சொன்னது இதுதான். “மதம் மாற்றம் செய்யாமல் இருப்பவர்களுக்கு மரியாதை கொடுக்க நான் விரும்புவதில்லை. அதாவது ஒரு கண்ணோட்டத்திலிருந்து வேறு கண்ணோட்டத்திற்கு மாற்றுவது. “அவர்களை நான் மதிக்க மாட்டேன், என்கிறார். “பரலோகம் நரகம் உண்மை ஜனங்கள் பரலோகத்திற்கு பதிலாய் நரகம் செல்ல வாய்ப்பிருப்பதை நம்பினால், இதை ஜனங்களுக்கு சொல்லி புரிய வைக்க வேண்டியது அவசியம் என்று உனக்கு தோன்றவில்லையா அப்படி செய்யாதிருப்பது சமூதாயத்தை கெடுப்பது போலாகுமே? ஜனங்கள் மனமாற்றமடைய செய்யகூடாது என்று நினைக்கிற நாத்திகர்கள் இருக்கிறார்கள். அவங்களை அப்படியே விட்டுடுங்க, உங்க மதத்தை நீங்களே வைத்துகொள்ளுங்கள், நீங்க எப்படி, அதாவது, ஜான், “மதமாற்றம் செய்யாமல் இருக்கிறவர்களை நீங்க எந்த அளவுக்கு வெறுக்கிறீங்க?” நித்திய வாழ்வு எனபது உண்மை என்பதை நம்பியும் மற்றவர்களுக்கு இதை பற்றி சொல்லாமல் இருப்பவர்களை நீங்க எந்த அளவுக்கு வெறுக்கிறீர்கள்? அதாவது, அதாவது ஒரு நிழலுக்கு பின்னால ஒரு ட்ரக் வருவதை நான் நம்புகிறேன் ஆனா நீங்கள் அதை நம்பாமல் இருக்கிறீர்கள் – இந்த வண்டி உங்களை நோக்கிதான் வந்துகொண்டிருக்கிறது – அப்படி இருக்கும்போது ஒரு கட்டத்தை நான் செயல் பட வேண்டியது அவசியம். இது அதை விட மிகவும் முக்கியமான காரியமாயிற்றே.”

அவருடைய அறிக்கை இதுதான், அதாவது நீங்கள் ஒருவரை நேசிப்பீர்கள் என்றால், சுவிசேஷத்தின் நற்ச்செய்தியை நிச்சயம் அவைகளோடு பகிர்ந்துகொள்ள் வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், ராபி, இதை கேட்டுகொண்டிருக்கிற கிறிஸ்தவர்கள் எதற்காக மற்றவர்களிடம் போய் சுவிசேஷத்தை பகிர்ந்திட வேண்டும்? இதற்கு அடித்தளமாக இருப்பது என்ன?

**ராபி கேலட்டி:** இதற்கு உந்துசக்தியாக இருப்பது கிறிஸ்துதான். இயேசு கிறிஸ்துதான் குறுகிய கால அருட்பணி பயணத்திற்கு சிறந்த உதாரணம். அவர் மனுஷ சாயலாக தோன்றினார். பரலோகத்தின் உயர் ஸ்தானத்தை விட்டு வந்தார். அவர் நமக்காக மாட்டு தொழுவத்தை தெரிந்துகொண்டார், பிதாவிற்கு உண்மையாய் கீழ்ப்படிவதற்கும் உக்கிரானக்காரனாக இருப்பதற்கும் சிறந்த உதாரனமானார். இந்த உலகத்தில் வாழ்கிறோம், ஜான், இங்க சுமார் பதினாறாயிரம் மக்கள் இனம் இருக்கிறது – 16000! இந்த 16000 ரத்தில், 6,000 மக்கள் இனத்தினர் இதுவரை இயேசு கிறிஸ்துவின் நாமத்தை கேள்விப்படவே இல்லை. சுவிசேஷம் இதுவரை அவர்களை சென்றடையவில்லை. ஒரு விஷயத்தை சொல்லுகிறேன்" ஜனங்கள் விரும்புகிற வாழ்க்கையானது பெரும்பாலும் அருட்பணி களத்தில் ஒன்று இல்லாமல் அழிந்துபோனதாக காணப்படுகிறது. அவர்கள் விரும்பிய வாழ்க்கை ஒருவேளை அருட்பணி களத்தில் அழிந்து போனதாக இருந்திடும். அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார், "நான் புறஜாதிகளுக்குள் போகவே மாட்டேன்." இயேசு புறஜாதிகளுக்குள் அவரை அனுப்பினார். கொர்நேலியுவை பார்த்தார், அதுதான் அவரது இலக்கு என அறிந்துகொண்டார். பவுல் கூறுகிறார், "கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் நான் இருக்கமாட்டேன்." அவர் இயேசுவை தமஸ்குவுக்கு போகும் வழியில் சந்தித்தார். அவர் அங்கே போய் அவர்கள் வாழ்க்கை முறையை தெரிந்துகொண்டார்."

நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும், விசுவாசிகளாக, எல்லாவற்றிற்கும் சரி என்று சொல்லவேண்டும். அதாவது, சிலர் சொல்வதை கேட்டிருக்கிறேன், "நா உட்புற

நகரங்களுக்கு போகவே மாட்டேன். “நா கடல்தாண்டி போக மாட்டேன்.” நா ஆப்ரிக்காவுக்கு போக மாட்டேன். நா உக்ரேய்னுக்கு போக மாட்டேன்.” காயப்பட்ட பெண்ணின் வீட்டிற்கு நா போகமாட்டேன்.” நா தயாராக இருக்கணும், விசுவாசிகளாக, எல்லாத்துக்கும் சரி என்று சொல்லணும். “தேவனே, நா எங்கே போக சித்தமாக இருக்கிறீர்> நான் எப்படி போக சித்தமாக இருக்கிறீர்? என்னை அனுப்பும். நான் போக ஆயத்தமாக இருக்கிறேன்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** கடுமையான ஆலோசனை கடுமையான விதிமுறைகள்.

மேலும் அடுத்த வாரம், நேயர்களே, இன்னொரு திருப்பத்துடன் பிரதான கட்டளையில் இருக்கும் மற்றொரு காரியத்தை பார்க்க இருக்கிறோம், இயேசு என்ன சொல்லியிருக்கிறார், அது உண்மையில் பெரிய தாக்கத்தை உண்டாக்கும். அவர் சொல்கிறார், நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படிக்கு அவர்களுக்கு உபதேசியுங்கள்.” ஒரு வேதாகம கல்லூரிக்கு போகாமல் இதை செய்வது ஒரு பெரிய இலக்கு போல தோன்றுகிறதா? ஒரு சாதாரண நபராக நீங்க இதை எப்படி செய்ய முடியும் என்று பார்க்க இருக்கிறோம், ஒவ்வொரு கிறிஸ்தவரும், இதை நிறைவேற்ற முடியும். இதை தவற விட மாட்டீர்கள் என நம்புகிறேன்.  அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.